Lighthouse Ministry International

# ஒப்புக்கொடுத்தல் ~ எதிர்த்து போரிடும் முறை

*யாக்கோபு 4:7 "ஆகையால், தேவனுக்கு கீழ்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."*

1. ஒவ்வொருநாளும் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

   **ஒப்புக்கொடுத்தலின் ஜெபம்.** "பரலோக பிதாவே, என்னுடைய சிந்தை, உணர்வுகள், விருப்பம், மற்றும் சரீரத்தின் ஆளுகையை உமக்கு கொடுக்கிறேன். என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னியும். நீர் என் வாழ்வின் ஆண்டவராயிருக்கும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உம்மை அழைக்கிறேன்."

2. தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்.

   **தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்ளும்படியான ஜெபம்.** "ஆண்டவரே, நீர் கொடுத்திருக்கிற சத்தியம் என்னும் கச்சையை, நீதியென்னும் மார்க்கவசத்தை, சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை, விசுவாசமென்னும் கேடகத்தை, இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் மற்றும் தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் நான் தரித்துக்கொள்கிறேன்."

3. சாத்தானை கட்டுங்கள்.

   **கட்டுவதற்க்கும் கட்டவிழ்பதற்க்கும் உரிய அறிக்கை.** "சாத்தானே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் உன் மீது அதிகாரத்தை எடுத்து உன்னை கட்டுகிறேன். என் சிந்தை, உணர்வுகள், வீருப்பம் மற்றும் சரீரத்தின் மீது உனக்கு ஆளுகை இல்லை. எல்லா அரண்களிலிருந்தும் எல்லா அடிமைத்தனத்திலிருந்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என்னை நான் கட்டவிழ்த்து கொள்கிறேன்."

---

4. எதிராளிக்கு நீங்கள் இடம் கொடுத்திருப்பீர்களானால், ஒப்புக்கொடுத்து பாவத்தை அறிக்கை செய்யுங்கள்.

   **அறிக்கையின் ஜெபம்.** "பிதாவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் உம்மிடத்தில் வருகிறேன். .................... ஆவிகளுக்கு நான் இடம் கொடுத்திருக்கிறேன். அவைகள் உம்மிடத்திலிருந்து அல்ல, என் வாழ்க்கையில் நானும் அவைகளை விரும்பவில்லை. என் வாழ்க்கையில் இந்த காரியத்தில் நான் செய்திருக்கிற பாவத்தை நான் அறிக்கை செய்கிறேன். இந்த ஆவிகள் என் வாழ்க்கையை ஆளுகை செய்ய அனுமதித்ததற்க்காக என்னை மன்னியும். என்னை மன்னித்தபடியினாலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நன்றி செலுத்துகிறேன்."

5. எதிராளியை எதிர்க்கும்போதும் கடிந்துக் கொள்ளும்போதும் அவனிடத்தில் இதை சொல்லுங்கள்.

   **அறிக்கை.** "........................ ஆவியே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் உன்மீது அதிகாரம் எடுக்கிறேன். என்னை நான் தேவனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டேன் ஆகவே நீ இருக்க முடியாது. இப்பொழுதே நீ என்னை விட்டு வெளியேறு என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் உனக்கு கட்டளையிடுகிறேன். உனக்கு என் சிந்தையோ என் சரிரமோ கிடைக்காது. உன்னுடைய எல்லா அடிமைத்தனத்திலிருந்து என்னை நான் கட்டவிழ்கிறேன். இப்பொழுதே நீ நரகத்துக்கு போ என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் கடிந்துக்கொண்டு கட்டளையிடுகிறேன்."

6. நீங்கள் ஜெபித்து பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையை ஆளுகை செய்யும்படி அழையுங்கள்.

   **சுத்திகரிக்கபட்ட ஜெபம்.** "பரலோக பிதாவே, என் வாழ்க்கையின் சுத்திகரிக்கப்பட்ட எல்லா பகுதிகளையும் நீர் உம்முடைய பரிசுத்த ஆவியினாலே நிரப்பி ஆளுகை செய்ய வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வேண்டிக்கொள்கிறேன்."

# கிறிஸ்துவுக்குள்.......

## நான் ஏற்றுக்கொள்ளப்பட்டேன்:

| | |
|---|---|
| யோவான் 1:12 | நான் தேவனுடைய பிள்ளை. |
| யோவான் 15:15 | நான் கிறிஸ்துவின் சிநேகிதன். |
| ரோமர் 5:1 | நான் நீதிமானாக்கப் பட்டிருக்கிறேன். |
| 1 கொரி 6:17 | நான் கர்த்தரோடிசைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயுமிருக்கிறேன். |
| 1 கொரி 6:19, 20 | நான் கிரயத்துக்கு கொள்ளப்பட்டேன். நான் தேவனுக்குரியவன். |
| 1 கொரி 12:27 | நான் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாயிருக்கிறேன். |
| எபேசி 1:1 | நான் பரிசுத்தவான். |
| எபேசி 1:5 | நான் தேவனுடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்ளப்பட்டேன். |
| எபேசி 2:18 | நான் பரிசுத்த ஆவியினாலே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறேன். |
| கொலேசி 1:14 | நான் மீட்கபட்டவனாகவும் எல்லா பாவங்களும் மன்னிக்கப் பட்டவனாகவும் இருக்கிறேன். |

## நான் பாதுகாப்பாக இருக்கிறேன்:

| | |
|---|---|
| ரோமர் 8:1, 2 | நான் நித்தியமாக ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுதலையானேன். |
| ரோமர் 8:28 | சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று நான் உறுதியாயிருக்கிறேன். |
| ரோமர் 8:31 | எனக்கு விரோதமாக குற்றஞ்சாட்டுகிற குற்றத்திலிருந்து நான் விடுதலையானேன். |
| ரோமர் 8:35 | நான் தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்கப்பட மாட்டேன். |
| 2 கொரி 1:20 – 22 | நான் தேவனால் ஸ்திரபடுத்தப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, முத்திரிக்கப் பட்டிருக்கிறேன். |
| கொலேசி 3:3 | நான் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறேன். |
| பிலிப்பி 1:6 | என்னில் நற்கிரியையைத் தொடங்கின தேவன் அதை நிறைவேற்றுவார் என்று நிச்சயமாயிருக்கிறேன். |
| 2 தீமோ 1:7 | தேவன் எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். |
| எபிரே 4:16 | ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை நான் பெற்றுக் கொள்கிறேன். |
| 1 யோவா 5:18 | நான் தேவனால் பிறந்தவன், பொல்லாங்கன் என்னைத் தொடமுடியாது. |

## நான் விசேஷமானவன்:

| | |
|---|---|
| மத் 5:13,14 | நான் பூமிக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறேன். |
| யோவான் 15:1,5 | நான் மெய்யான திராட்சை செடியின் கொடியாகவும், அவருடைய ஜீவனின் வழியாகவும் இருக்கிறேன். |
| யோவான் 15:16 | நான் தெரிந்துகொள்ளபட்டவனாகவும், கனி கொடுக்கும்படியாக ஏற்படுத்தப் பட்டவனாகவும் இருக்கிறேன். |
| அப் 1:8 | நான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சியாயிருக்கிறேன். |
| 1 கொரி 3:16 | நான் தேவனுடைய ஆலயம். |
| 2 கொரி 6:1 | நான் தேவனுடைய உடன் வேலையாள் |
| எபே 2:6 | நான் உன்னதங்களிலே கிறிஸ்துவோடே கூட உட்கார்ந்திருக்கிறேன். |
| எபே 2:10 | நான் தேவனுடைய செய்கையாயிருக்கிறேன். |
| எபே 3:12 | நான் தைரியத்தோடும் திடநம்பிக்கையோடும் தேவனிடத்தில் சேருவேன். |
| பிலிப்பி 4:13 | என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. |


**LIGHTHOUSE MINISTRY INTERNATIONAL**

**P. O. 120297 · St. Paul · MN · 55112**

**Phone: 651 · 483·0888 Fax: 651 · 483·1888**
www.lighthouseministryintl.org

## போர்வீரனின் ஜெபம்
## எபேசியர் 6:10-18

பரலோக பிதாவே,
உம்முடைய போர்வீரன் யுத்தத்துக்காக ஆயத்தம் செய்கிறான்.
தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்வதின்
மூலமாக இன்று நான் சாத்தான் மீது ஜெயம் எடுக்கிறேன்!

நான் **சத்தியம் என்னும் கச்சையை** தரிக்கிறேன்!
சாத்தானுடைய பொய்க்கு நான் பலியாகாதபடிக்கு
உம்முடைய வார்த்தையாகிய சத்தியத்தில் நான் உறுதியாய் நிற்கிறேன்.

நான் **நீதியென்னும் மார்க்கவசத்தை** தரிக்கிறேன்!
நான் சுத்தமும் பரிசுத்தமாய் நிலைத்திருப்பதற்க்கு,
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே காக்கப்படுவதற்க்கு
தீமையிலிருந்து இது என் இருதயத்தை காத்துக் கொள்ளட்டும்.

நான் **சமாதானத்தின் பாதரட்சையை** தரிக்கிறேன்!
என் மூலமாக உம்முடைய சமாதானம் பிரகாசிக்கும்படியாகவும்
நான் சந்திக்கிற அனைவருக்கும் ஒளியாயிருக்கும்படியாகவும்
நான் உம்முடைய சுவிசேஷமாகிய நற்செய்தியில் உறுதியாய்
இருக்கிறேன்.

நான் **விசுவாசமென்னும் கேடகத்தை** தரிக்கிறேன்!
நான் ஆவிக்குரிய தோல்வியினால் தாக்கப்படாதபடிக்கு
சாத்தானுடைய அக்கினியாஸ்திரங்களாகிய சந்தேகம், மறுதலிப்பு,
வஞ்சகம் மற்றும் சோர்வடைய செய்தலை சந்திக்க
ஆயத்தமாயிருக்கிறேன்.

நான் **இரட்சணியமென்னும் தலைச்சீராவை** தரிக்கறேன்!
சாத்தான் என் சிந்தையில் அரண்களை வைக்காதபடிக்கு
நான் என் மனதை உம்மீது பதிக்கிறேன்.

நான் **ஆவியின் பட்டயத்தை** எடுக்கிறேன்!
சாத்தானுடைய சோதிக்கிற வார்த்தைகளை வெளிபடுத்துவதற்க்கு
இருபுறம் கருக்குள்ள உம்முடைய வார்த்தையின் பட்டயத்தை என்
கையில் ஏந்தி ஆயத்தமாயிருக்கிறேன்.

உம்முடைய போர்வீரனாகிய நான் விசுவாசத்தினாலே தேவனுடைய
எல்லா சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுகிறேன்!

**இன்று ஆவிக்குரிய ஜெயத்தில் வாழ்வதற்க்கு நான்
ஆயத்தமாயிருக்கிறேன்.**

### தேவன் சர்வவல்லமை உள்ளவராயிருக்கிற படியினாலே

***தேவன் சர்வவல்லமை*** *உள்ளவராயிருக்கிற படியினாலே,*

*நான் திறமையாக கையாளவேண்டும்*

*சூழ்நிலைகள்*

*சூழ்ச்சியான மனிதர்கள்,*

*ஆதாரத்தை உருவாக்குதல்,*

*தேவன் என் நம்முடைய வாழ்க்கையில் வைத்திருக்கிறதை நிறைவேற்றுவதற்க்காக தேவனை முந்தி செயல்பட வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து நாம் விடுதலையாக்கப் பட்டோம்.*

*இது செய்து முடிக்கப்பட்டது என்று பார்ப்பதற்க்கு தேவையான எல்லாம் தேவனிடத்திலிருக்கிறது.*

*அவர் அதை சரியாக, சரியான வழியில், சரியான நேரத்தில் செய்து முடிப்பார்.*

*அவர் நமக்கென்று வைத்திருப்பதை அவர் நம்மிடத்திலே கொண்டுவருவதற்க்கு நாம் அனுமதிக்கும் போது,*

*நாம் அதை இலவசமாய் பெற்றுக்கொண்டு முழுமையாக அனுபவிக்க முடியும்.*

~ ராய் லெஸிங்